සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

| | | |
|---|---|---|
| හින්දු ධර්මය I<br>இந்து சமயம் I<br>Hinduism I | 42 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள்:**

* ⁕ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* ⁕ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* ⁕ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* ⁕ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் **தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**1.** (1) கர்ஷணம் (2) பிரதிட்டை (3) அந்தியேட்டி
(4) உற்சவம் (5) பிராயச்சித்தம்

**2.** (1) பிரகாமியம் (2) பிராணாயாமம் (3) தாரணை
(4) பிரத்தியாகாரம் (5) தியானம்

**3.** (1) போற்றிப்ப.்றொடை (2) இருபா இருப.்து (3) கொடிக்கவி
(4) உண்மைநெறி விளக்கம் (5) சங்கற்ப நிராகரணம்

**4.** (1) தர்மம் (2) அர்த்தம் (3) காமம்
(4) யோகம் (5) மோட்சம்

**5.** (1) தட்சிணகைலாச புராணம் (2) கைலாயமாலை (3) கதிரமலைப் பள்ளு
(4) கண்ணகி வழக்குரை (5) பெரியபுராண வசனம்

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. **பொருந்தாத** அச்சோடிச் சொற்களைத் தெரிவுசெய்க.

**6.** (1) படைத்தல் - எழுத்தாணி பிடிக்கும் கரம்
(2) காத்தல் - மோதகம் இருக்கும் கரம்
(3) அழித்தல் - அங்குசம் ஏந்திய கரம்
(4) அருளல் - அமுத கலசம்
(5) மறைத்தல் - பானை வயிறு

**7.** (1) சலவிக்கிரகம் - இடத்துக்கிடம் நகர்த்தக்கூடியது
(2) மானசாரம் - சிற்பசாத்திரம்
(3) வாச்சிய மராயன் - இசைக்கலைக்குரிய பட்டம்
(4) பஞ்சமரபு - ஓவியநூல்
(5) தருமராஜரதம் - சிற்பக்கலைக் களஞ்சியம்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



8. (1) கொடிமரம் - பதி
   (2) கொடிச்சீலை - பசு
   (3) பலிபீடம் - முத்திப்பேறு
   (4) தருப்பைக் கயிறு - பாசம்
   (5) கோபுரம் - தூலலிங்கம்

9. (1) அயமாத்மா பிரமம் - இந்த உலகமே பிரமம்
   (2) சத்யாத்நப் பிரமதிதவ்யம் - சத்தியத்தினின்றும் நழுவுதல் கூடாது
   (3) தர்மாத்நப் பிரமதிதவ்யம் - தர்மத்தினின்றும் நழுவுதல் கூடாது
   (4) ஸத்யம் வத - உண்மை பேசுக
   (5) தர்மம் சர - தர்ம வழியில் நட

10. (1) திருமூலர் - திருக்கைலாச மரபில் வந்தவர்
    (2) கடையிற் சுவாமிகள் - முத்தியானந்தர் எனும் தீட்சா நாமம் கொண்டவர்
    (3) சித்தானைக்குட்டி சுவாமிகள் - பெரியானைக்குட்டி சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டவர்
    (4) சிவயோக சுவாமிகள் - கோவிந்தசாமி எனும் இளமைத் திருநாமம் உடையவர்
    (5) செல்லப்பா சுவாமிகள் - தேரடித் தேசிகன் என்று போற்றப்படுபவர்

● **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 'அ', 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு ஏற்ற விதத்தில் 'ஆ' நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

11.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | ஆகமம் | A - | பதினெட்டுப் பருவங்கள் |
| (ii) | வைணவ ஆகமங்கள் | B - | ஏழு காண்டங்கள் |
| (iii) | சாக்த ஆகமங்கள் | C - | தொன்று தொட்டுவரும் அறிவு |
| (iv) | மகாபாரதம் | D - | வைகானசம் |
| (v) | இராமாயணம் | E - | மகாநிர்வாண தந்திரம் |

(1) A D E B C (2) C A B D E (3) C D E A B (4) C D E B A (5) C E D A B

12.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | வேதங்கள் | A - | கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை |
| (ii) | மணிமேகலை | B - | 'கணனாம் த்வாம் கணபதி...' |
| (iii) | திருஞானசம்பந்தர் | C - | திருத்தொண்டர் திருவந்தாதி |
| (iv) | நம்பியாண்டார் நம்பி | D - | 'அங்கமும் வேதமும்...' |
| (v) | ஆதிசங்கரர் | E - | சண்மத பிரதித்தாபகர் |

(1) A B C E D (2) A B D C E (3) B A D C E (4) B A E C D (5) B A E D C

13.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | திருக்கோணேச்சரம் | A - | தேசத்துக் கோயில் |
| (ii) | திருக்கேதீச்சரம் | B - | இராமர் வழிபட்ட தலம் |
| (iii) | கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் | C - | திருத்தம்பலேஸ்வரம் |
| (iv) | முன்னேச்சரம் | D - | மஹாதுவட்டாபுரம் |
| (v) | நகுலேச்சரம் | E - | குளக்கோட்டன் திருப்பணி |

(1) A B E C D (2) D B C A E (3) E B A C D (4) E C A D B (5) E D A B C

14.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | சாங்கியம் | A - | சமாதி |
| (ii) | யோகம் | B - | சரீரசரீரி சம்பந்தம் |
| (iii) | அத்வைதம் | C - | இருமைவாதம் |
| (iv) | விசிட்டாத்வைதம் | D - | பேதவாதம் |
| (v) | துவைதம் | E - | ஒருமைவாதம் |

(1) A C B E D (2) A C E D B (3) C A D B E (4) C A E B D (5) E A D C B

[பக். 3 ஐப் பார்க்க

| | அ | ஆ |
|---|---|---|
| 15. | (i) விகற்பம் | A - பிடித்ததைப் பிடித்திருத்தல் |
| | (ii) கற்பம் | B - தன்னைவிடப் பிறர் ஒவ்வாரெனல் |
| | (iii) அஞர் | C - அகங்காரம் மேலிடுதல் |
| | (iv) மதம் | D - சிரித்தல் |
| | (v) நகை | E - எப்பொழுதும் துக்கப்படுதல் |

(1) A B C D E (2) A B D C E (3) B A D C E (4) B A E C D (5) B C D E A

- **16** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**16.** இந்து வானியல் மரபில் 'பஞ்சசித்தாந்திகை' எனும் தொகுப்பு நூலை வெளியிட்டவர் யார்?
(1) ஆரியப்பட்டர் (2) வராகமிகிரர் (3) சுஸ்ருதர்
(4) பாஸ்கரர் (5) சரகர்

**17.** கல்வெட்டுக்களிலுள்ள 'ஸ்வஸ்தி ஸ்ரீ' என்பதால் குறிப்பிடப்படுவது
(1) கடவுளைப் போற்றுக. (2) உண்மை பேசுக.
(3) மங்களமுண்டாகுக. (4) அறத்தைப் பின்பற்றுக.
(5) அரசரைப் போற்றுக.

**18.** தமிழகத்தில் சிறுத்தொண்டரால் வழிபடப்பட்ட விநாயகர் திருவுருவம் உள்ள இடம்
(1) மாமல்லபுரம் (2) தஞ்சாவூர் (3) ஸ்ரீரங்கம்
(4) கணபதீச்சரம் (5) திருநாரையூர்

**19.** 'தந்திர சாஸ்திரம்' எனப் போற்றப்படும் நூல்
(1) திருமந்திரம் (2) தேவாரம் (3) சிவஞானபோதம்
(4) திருவாய்மொழி (5) கொன்றை வேந்தன்

**20.** 'மும்முடிச்சோழ மண்டலம்' என அழைக்கப்படுவது
(1) தென்கிழக்காசியா (2) இலங்கை (3) தஞ்சாவூர்
(4) மதுரை (5) வட இந்தியா

**21.** 'சர்வமூலம்' என்ற தொகை நூலின் ஆசிரியர் யார்?
(1) மத்துவர் (2) இராமானுஜர் (3) சங்கரர்
(4) கௌடபாதர் (5) மெய்கண்டார்

**22.** "விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே" என்று பாடியவர்
(1) அபிராமிப்பட்டர் (2) குமரகுருபரர் (3) அருணகிரிநாதர்
(4) தாயுமானவர் (5) சிவப்பிரகாசர்

**23.** சூரியன், தனு இராசியிலிருந்து மகர ராசிக்குச் செல்லும் தினத்தில் கொண்டாடப்படுவது
(1) சித்திரைப் புதுவருடம் (2) நவராத்திரி (3) தைப்பொங்கல்
(4) தீபாவளி (5) சிவராத்திரி

**24.** இந்திய மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்
(1) ஆத்திரேயர் (2) சரகர் (3) தன்வந்திரி
(4) சுஸ்ருதர் (5) வராகமிகிரர்

**25.** "முத்தி என்னளவில் நின்றுவிடும், அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதனால் அதிலுள்ள இன்பமே ஒப்பற்றது" எனக் குறிப்பிட்டவர்
(1) ஆறுமுகநாவலர் (2) விவேகானந்தர் (3) இராமகிருஷ்ணர்
(4) விபுலாநந்தர் (5) அருணாசல தேசிகர்

**26.** "மூவுலகிலும் எனக்கென்று கடமைகளோ அடையவேண்டிய தேவைகளோ எதுவும் இல்லை. எனினும் யான் செயலாற்றிய வண்ணமே உள்ளேன்" எனும் பகவத்கீதையின் கூற்றின் மூலம் வெளிப்படுவது
(1) தன்னலமற்ற சேவை (2) ஆழ்ந்த இறை பற்று (3) நிருத்தியாசனம்
(4) காமிக கர்மம் (5) பிரகிருதி

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



27. பஞ்சயக்ஞங்களில் பட்டிப் பொங்கலுக்கு பொருத்தமானதாக அமைவது யாது?
(1) பிரமயக்ஞம் (2) தேவயக்ஞம் (3) பிதிர்யக்ஞம்
(4) பூதயக்ஞம் (5) மானிடயக்ஞம்

28. 'கோயிற்புராணம்' என்ற நூலின் ஆசிரியர்
(1) அருணந்தி சிவாசாரியார் (2) உமாபதி சிவாசாரியார் (3) மறைஞான சம்பந்தர்
(4) வள்ளலார் (5) மெய்கண்ட தேவர்

29. படிமத்தின் அங்கங்களின் ஒரு பகுதி மட்டும் தெரியும்படியாகச் செதுக்கப்படும் சிற்பங்கள்
(1) சல வடிவங்கள் (2) சலாசல வடிவங்கள்
(3) புடைப்புச் சிற்பங்கள் (4) முழுவடிவச் சிற்பங்கள்
(5) வெண்கலச் சிற்பங்கள்

30. இந்துக்களின் மருத்துவத்தில் 'திரிதாது' எனக் குறிப்பிடப்படுபவை யாவை?
(1) வாதம், பித்தம், கபம் (2) மூப்பு, பிணி, சாக்காடு (3) மனம், வாக்கு, காயம்
(4) ஆணவம், கன்மம், மாயை (5) பாயுரு, பாணி, உபத்தம்

- **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து கூற்றுகள் / விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

31. **திருப்பாணாழ்வார்**
(1) பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர் ஆவார்.
(2) பாணர் மரபில் தோன்றியவர்.
(3) ஸ்ரீ வைணவ குலபதி எனச் சிறப்பிக்கப்படுபவர்.
(4) ஸ்ரீ ரங்கநாதனைப் புகழ்ந்துபாடி வைணவப்பணி செய்தவர்.
(5) 'அமலனாதிபிரான்' எனும் பிரபந்தத்தைப் பாடியருளியவர்.

32. **தென்மோடிக் கூத்துக்கான ஒப்பனைகள்**
(1) ஆண்களுக்குரிய முடி பூ முடியாகக் காணப்படும்.
(2) உடை கரப்பு உடையாகக் காணப்படும்.
(3) காலில் சலங்கை கட்டியிருப்பர்.
(4) ஆண்களே பெண்களாக ஒப்பனை செய்து கொள்வர்.
(5) உடல் முழுவதும் வெள்ளை நிற மாத்துப் பூசியிருப்பர்.

33. **'அப்பிரதக்சித்தி' எனும் தத்துவம்**
(1) பிரபஞ்சம் நிலைப்பதற்கு இறைவனின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.
(2) ஆன்மாக்களும் உலகமும் இறைவனின் பிரிக்க முடியாத அங்கங்கள் என்கிறது.
(3) ஆன்மாக்கள் நிலைத்திருப்பதற்கு ஈஸ்வரன் காரணமாகின்றார் என்கிறது.
(4) இறைவனைத் தவிர வேறு எதுவும் உண்மை இல்லை என்கிறது.
(5) ஆன்மாக்கள் இறைவனின் பிரிக்க இயலாத அங்கங்கள் என்கிறது.

34. **சைவசித்தாந்த தத்துவம்**
(1) முப்பொருள் உண்மையைக் கூறுவது.
(2) வரையறையற்ற அறிவுப்பொருளை விளக்குவது.
(3) ஆன்மா சார்ந்ததன் வண்ணமானது எனக் கூறுவது.
(4) மூவகைப் பிரமாணங்களைக் கொண்டது.
(5) கன்மத்தின் செயல்கள் ஏழு எனக் குறிப்பிடுவது.

35. **சிவராத்திரி விரதம்**
(1) சிவனுக்கு இன்பமான இராத்திரி என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது.
(2) மகாசிவராத்திரி நீங்கலாக ஐவகைச் சிவராத்திரிகள் உள்ளன.
(3) மாசி மாத கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியில் மகாசிவராத்திரி அனுஷ்டிக்கப்படும்.
(4) கந்தபுராணத்தில் சிவராத்திரி மகிமை பற்றிக் கூறப்பட்டுள்ளது.
(5) பாற்கடலை தேவாசுரர்கள் கடைந்த தெய்வீக வரலாற்றுடன் தொடர்புடையது.

[பக். 5 ஐப் பார்க்க

- மேல்வரும் பகுதியில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>ஆத்திரேயர் | B<br>செந்நாப்போதகர் | C<br>யாழ்நூல் | D<br>கௌடபாதர் | E<br>போசராச பண்டிதர் |
| F<br>மாண்டூக்கிய காரிகை | G<br>பரிமேலழகர் | H<br>சரகசம்ஹிதை | I<br>மகாலஷ்மி தோத்திரம் | J<br>சரசோதி மாலை |

**36.** சுவாமி விபுலாநந்தருடன் தொடர்புடைய சோடி
(1) CA (2) CB (3) CI (4) DJ (5) FI

**37.** இலங்கையில் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்துடன் தொடர்புடைய சோடி
(1) AJ (2) CJ (3) EG (4) EH (5) EJ

**38.** ஆயுர்வேத மரபுடன் தொடர்புடைய சோடி
(1) AB (2) AH (3) AJ (4) BH (5) EH

**39.** அத்வைத வேதாந்தத்துடன் தொடர்புடைய சோடி
(1) BF (2) DF (3) DH (4) DJ (5) EF

**40.** திருக்குறளுடன் தொடர்புடைய சோடி
(1) AB (2) BG (3) BJ (4) GH (5) GJ

- **41** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்க.

**41. காஞ்சி கைலாசநாதர் கோயிலின் அமைப்பு**
(1) இராஜசிம்மனால் உருவாக்கப்பட்டது.
(2) திராவிடக் கட்டடக் கலையின் பிரதான அம்சங்களைக் கொண்டது.
(3) கருவறையில் பதினாறு பட்டைகளைக் கொண்ட இலிங்கம் உள்ளது.
(4) விமானம் நான்கு தளங்களைக் கொண்டது.
(5) சுற்றாலை மண்டபத்தில் சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

**42. 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்...'**
(1) திருநாவுக்கரசரால் பாடப்பட்டது.
(2) திருநாவுக்கரசரின் சிவபக்தியை வெளிப்படுத்துகிறது.
(3) சமூக, சமரச மனப்பாங்கை வளர்க்கிறது.
(4) தத்துவார்த்தச் சிந்தனைகளைத் தூண்டுகின்றது.
(5) சிவவழிபாட்டு முறைகளை எடுத்துக்கூறுகின்றது.

**43. துளசி இராமாயணம்**
(1) இராமனைத் தலைவராகக் கொண்டு எழுதப்பட்டது.
(2) இந்தி மொழியில் துளசிதாசரால் இயற்றப்பட்டது.
(3) இந்து தர்ம நெறிக்கும் மானுட விழுமியங்களுக்கும் அடிப்படையானது.
(4) விஸ்ணுவின் அவதாரச் சிறப்புக்களைக் கூறுகின்றது.
(5) இந்துக்களின் கலை வளர்ச்சிக்கு அடிப்படையானது.

**44. இந்து ஊடக வகைகளில் மரபு வழிச் சாதனங்கள்**
(1) ஒருவரின் பண்பாட்டை மற்றொருவர் அறிய உதவுகின்றன.
(2) சமய ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்கின்றன.
(3) ஓலைச் சுவடிகள், அழைப்பு ஓலைகள் என்பன செய்திகளை வழங்குகின்றன.
(4) வழிபாட்டு முறைகளைப் பிறருக்குத் தெரியப்படுத்துகின்றன.
(5) சுப நேரங்களில் காரியங்களைச் செய்யத் துணைசெய்கின்றன.

PAST PAPERS WIKI

**45.** இந்து மதத்தில் சோதிடத்தின் முக்கியத்துவம்
(1) வேதாங்கங்களில் ஒன்றாகும்.
(2) அதர்வ வேதத்தில் சோதிடம் பற்றி அறியலாம்.
(3) சோதிட சாஸ்திரத்தில் சூரிய வருடக் கணிப்பு உள்ளது.
(4) இந்து அறிவியற் கலைகளில் ஒன்றாகும்.
(5) இந்துக்களின் வாழ்வியற் சடங்குகளுக்கு அடிப்படையானது.

**46.** இந்து மருத்துவத்தின் சிறப்பு
(1) இருக்கு வேதத்தில் ஓஷதி சூக்தம் வாதம், பித்தம், கபம் ஆகியவற்றின் அறிவு பற்றியது.
(2) இந்து மருத்துவ வரலாற்றில் அதர்வ வேத பேசஜானி, ஆயுஸ்ஜானி சூக்தங்கள் குறிப்பிடத்தக்கவை.
(3) இந்து மருத்துவம் உடலுள, ஆன்மிக நிலையில் செயற்படுவது.
(4) பல்லவர் காலக் கல்வெட்டுகள் மருத்துவர்களுக்கு மானியமாக வழங்கிய நிலங்களை 'மருத்துவப்பேறு' எனக் குறிப்பிடுகின்றன.
(5) கம்பராமாயணம் மருந்துகளைப் பற்றியும் மருத்துவர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது.

**47.** நல்வழி நூல்
(1) மனிதன் நல்வாழ்வு வாழ வழிகாட்டுகின்றது.
(2) கடவுள் வாழ்த்தில் விநாயகரைப் போற்றுகிறது.
(3) ஔவையாரால் இயற்றப்பட்டது.
(4) சைவ சமயம் சார்ந்த தத்துவக் கருத்துக்களை உடையது.
(5) சோழர் காலத்தில் தோற்றம் பெற்றது.

**48.** இலங்கை வரலாற்றில் கண்ணகி வழிபாடு
(1) மட்டக்களப்பில் பெண் தெய்வங்களுள் பெருந்தெய்வமாகப் போற்றப்படுவது.
(2) கண்ணகி சிவசக்தியின் அம்சமாகவும் கருதப்படுபவள்.
(3) இலங்கையில் கண்ணகி வழிபாடு கஜபாகு மன்னனால் ஆரம்பிக்கப்பட்டது.
(4) வற்றாப்பளையில் கண்ணகி அம்மனுக்கு வழிபாடு இடம்பெற்று வருகின்றது.
(5) இலங்கையில் இந்துக்களுடன் பௌத்தர்களும் கண்ணகி வழிபாடு ஆற்றுகின்றனர்.

**49.** வேதகால வழிபாடுகள்
(1) யாகங்களுக்கு முதன்மையளித்தன.
(2) மனித உரு ஏற்றப்பட்ட தெய்வங்களைப் பற்றி விபரித்தன.
(3) இசை மூலமான வழிபாட்டுக்கு முதன்மை அளித்தன.
(4) ஒரு தெய்வத்துக்கு பல பெயர்கள் கூறி அர்ச்சித்தன.
(5) இயற்கை வழிபாட்டினை முதன்மைப்படுத்தின.

**50.** சிந்துவெளியும் சைவநெறியும்
(1) சூரிய வழிபாட்டுடன் தொடர்புடைய சான்றுகள் கிடைத்துள்ளமை
(2) இறைவனுக்கு நிவேதனம் செய்யும் முறைமை காணப்பட்டமை
(3) இலிங்க வடிவான கூம்புருக்கற்கள் கிடைக்கப்பெற்றமை
(4) நாக வழிபாட்டை முதன்மைப்படுத்தும் களிமண் தாயத்துக்கள் கிடைக்கப்பெற்றமை
(5) தாய்த் தெய்வ வழிபாடு நிலவியமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளமை

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

හින්දු ධර්මය II
இந்து சமயம் II
Hinduism II

**42 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

✳ பகுதி **I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (அ) 'உபநிடதம்' என்னும் சொல்லின் பொருளினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) உபநிடதங்கள் **நான்கின்** பெயர்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(இ) உபநிடதங்கள் கூறும் பிரமத்தின் இயல்புகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(ஈ) ஆன்மா பற்றி உபநிடதங்கள் கூறுவனவற்றை விபரிக்குக. (08 புள்ளிகள்)

**2.** (அ) 'பண்டிகை' என்பதன் பொருளைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) பண்டிகைகள் **மூன்றின்** பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(இ) தைப்பொங்கல் பண்டிகையின் சிறப்பம்சங்களைச் சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

(ஈ) பண்டிகைகள் மனித மேம்பாட்டினை வளம்படுத்துமாற்றினை விபரிக்குக. (08 புள்ளிகள்)

**3.** (அ) 'அறம்' என்பதன் பொருளைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) தர்மசாஸ்திரங்கள் **நான்கின்** பெயர்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(இ) பகவத்கீதை குறிப்பிடும் அறம் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(ஈ) இந்துக்களின் புருடார்த்தக் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களை விபரிக்குக. (08 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
Past Papers Wiki

## பகுதி II

**4.** இந்து தத்துவ மரபில் துவைத வேதாந்தம் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(அ) துவைதம் - பொருள் விளக்கம் (03 புள்ளிகள்)

(ஆ) ஐவகைப் பேதங்கள் (05 புள்ளிகள்)

(இ) ஈஸ்வரக்கொள்கை (06 புள்ளிகள்)

(ஈ) சீவக்கொள்கை (06 புள்ளிகள்)

**5.** சைவசித்தாந்தம் கூறும் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய சிந்தனைகளை மேல்வரும் தலைப்புகளில் விபரிக்குக.

(அ) பதி உண்மை

(ஆ) பதியின் இயல்புகள்

(இ) பசு இலக்கணம்

(ஈ) ஆன்ம விடுதலை (05 × 4 = 20 புள்ளிகள்)

**6.** நாட்டார் கலை மரபின் சிறப்பம்சங்களை மேல்வரும் கலைகளை முதன்மைப்படுத்தி விளக்குக.

(அ) கூத்து

(ஆ) காவடி

(10 × 2 = 20 புள்ளிகள்)

**7.** இந்து சமய வளர்ச்சிக்கு மேல்வரும் அருளாளர்கள் ஆற்றிய பங்களிப்பினை விளக்குக.

(அ) திருநாவுக்கரசு நாயனார்

(ஆ) சிவயோக சுவாமிகள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின் வகிபங்கினை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library